ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2001/37 - 2017 ජනවාරි මස 11 වැනි බදාදා - 2017.01.11

2001/37 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே காலி நான்கு கடவைகள் பிரதேச செயளாலர் பிரிவில் காலி மாநகர எல்லையில் 97 எ. வெலிவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெலிவத்த கிராமத்தில் அமைத்துள்ள நில அளவை நாயகம் அவர்களால் தயார் செய்யப்பட்ட ஆ.வ. 4198 இலக்கம் கொண்ட 01 ஆம் இலக்க துண்டு என காண்பிக்கப்படும் 0.0524 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ் குறிப்பிடும் பெயர்களையும் எல்லைகளையும் கொண்ட காணித்துண்டு.

1. **துண்டு இலக்கம்: 01**

காணியின் பெயர்: ஒரப்புவத்த மாவத்தை, துண்டு இல. 09 மாத்தறை வீதி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடமும் உடைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதியும் உள்ளன; உரிமை கோருநர்: கண்டுபிடிக்கப்பட முடிய வில்லை; விஸ்தீரணம்: 0.0524 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி மு.ப. 09.00 மணிக்கு காலி, நான்கு கடவைகள் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்பயும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் கொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டப்ளியூ. எஸ். சத்தியானந்த,
பிரதேச செயலாளர்,
நான்கு கடவைகள் - காலி.

பிரதேச செயலகம்,
நான்கு கடவைகள் - காலி,
2017, சனவரி 02.

01 - 910



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.